(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை		வருவாய்	மூலதனம்	கடன்
48	போக்குவரத்துத் துறை	198,66,03	79,27,27	720,36,31
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	2,00,04	1,00,00	. . .
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	149,54,44	. . .	. . .
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	3,470,94,16	. . .	. . .
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	45,26	. . .	. . .
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	45,20	14	39,95,00
	பெருமொத்தம்	**4,110,62,92**	**716,98,97**	**1,095,80,50**

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2019 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

2019 ஜனவரி 8]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்— விவாதத்திற்கான பதிலுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். 62 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய திருத்தங்களைக் கொடுத்திருக்கின்றனர். ஒவ்வோர் உறுப்பினரும் திருத்தங்களை முன்மொழிந்து பேசினால் காலதாமதம் ஆகும் என்பதால் நான் திருத்தங்களை முன்மொழிகின்ற உறுப்பினர்களின் பெயரைப் படிக்கிறேன். திருத்தங்களை முன்மொழியும் உறுப்பினரும், வழிமொழியும் உறுப்பினரும் உட்கார்ந்த இடத்திலிருந்தே கையை உயர்த்தினால் போதும். மாண்புமிகு உறுப்பினர்களின் திருத்தத்தைப் பதிவு செய்துகொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் திருத்தங்களை முன்மொழிவதற்குமுன் அவரவர் இருக்கையில் அமரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.